தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2024

**18 - 22 வயதுப்பிரிவு**
(01.01.2002 – 31.12.2006 வரையில் பிறந்தோர்)

## நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள்

ஈழத்தீவில் மொழி, கலை, பண்பாடு என அனைத்தாலும் வேறுபட்டிருந்த தமிழர் தேசத்தையும் சிங்களவர் தேசத்தையும் வலிந்து ஒற்றையாட்சிக்கு உட்படுத்தி மாபெரும் தவறிழைத்த பிரித்தானியர், ஈழத்தைவிட்டு வெளியேறும்போது தமிழரை ஆளுகின்ற உரிமையையும் சிங்களவரிடம் கையளித்துச் சென்றனர். இது தமிழரது உரிமைகள் பறிக்கப்பட்டு தொடர்ந்து தமிழின அழிப்பு நடைபெறுவதற்கு வித்திட்டது. சிங்கள அரச ஆட்சிக்கான ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிப்பதில் யார் கூடுதல் கவனம் செலுத்துகிறார்களோ அவர்களுக்கு வாக்களித்து அரசபீடம் ஏற்றுபவர்களாகச் சிங்கள மக்கள் செயற்படவைக்கப்பட்டார்கள்.

ஆட்சித் திறனை வெளிப்படுத்தாத ஊழல் நிறைந்த சிங்களக் கட்சிகள் தேர்தலை வெல்வதற்குத் தமிழரை அழிப்பதை வழிமுறையாகப் பின்பற்றின. இதன் தொடர்ச்சியாக, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையைப் பார்க்கலாம். 1974 யனவரி 3ஆம் நாளிலிருந்து எட்டு நாள்கள் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதில் பன்னாடுகளைச் சேர்ந்த பலரும் கலந்துகொண்டிருந்தனர். இதனைப் பொறுத்துக்கொள்ளாத சிங்கள ஆட்சியாளர், இம்மாநாட்டின் இறுதிநாளன்று வீரசிங்கம் மண்டபத்தில் திரண்டிருந்த மக்களைக் காவல்துறையினரைக் கொண்டு திடீரெனத் தாக்கினர். இதில் ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலையில் ஈடுபட்ட காவல்துறையினருக்குப் பணி உயர்வும் பாதுகாப்பான இடத்துக்கு இடமாற்றமும் வழங்கப்பட்டது. உலகில் எந்த அரசும் நிகழ்த்தாத ஈனச்செயலைச் செய்தது சிங்கள அரசு.

இச்செயற்பாடுகள் தமிழ் இளையோரிடையே வேரூன்றியிருந்த தமக்கான உறுதியான தன்னாட்சித் தமிழீழத்தின் தேவையை வலுவடையச் செய்தன. அமைதிவழியில் தங்கள் உரிமைக்காகப் போராடிய தமிழர்களை ஆயுதங்கள் கொண்டும் அரச அதிகாரம் கொண்டும் அடக்கியது சிங்கள அரசு. ஈழத்திலிருந்து தமிழர்களை முற்றாக அழிப்பதற்குப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயற்பட்டது. தமிழரது கல்வி, கலை, பண்பாடுகளைச் சிதைத்ததோடு தமிழர் நிலங்களை வன்பறிப்புச் செய்தது. தமிழரது வாழ்வாதாரத்துக்கான மீன்பிடித்தொழிலுக்கு அச்சுறுத்தல் விளைவித்தது. தமிழரது சொத்துகளைச் சூறையாடி ஏதிலிகளாக்கியது. தமிழர் தாயகப் பகுதியெங்கும் தாக்குதல்களைத் தொடங்கியது. தமிழ் இளையோர்களைக் கைதுசெய்து காணாமல் ஆக்கியது. இதற்கு அண்டை நாடுகளையும் துணைக்கு அழைத்துக்கொண்டது.

இத்தனை அவலங்களையும் தனித்து எதிர்கொண்டு நின்ற ஈழத்தமிழினம், தமது இருப்புக்காகக் கடுமையாகப் போராடியது. யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளின் ஐம்பதாவது ஆண்டு நிறைவில் நிற்கிறோம். இன்றும் எங்கள் தாயகத்தில் தமிழின அழிப்பு நடவடிக்கைகளைச் சிங்கள அரசுகள் திட்டமிட்டுத் தொடர்ந்தவண்ணமே உள்ளன. போதைப்பொருள்களைத் தமிழர் தாயகமெங்கும் தாராளமாக்கி எமது இளந்தலைமுறையின் கல்வி, உள வினைத்திறன்களை மழுங்கடித்து வருகிறது. இதுபோன்று இன்னும் ஏராளம் தமிழின அழிப்பு வடிவங்களைக் கையில் எடுத்து செயற்படுத்தி வருகிறது.

நன்னெறியில் நானிலத்தை ஆளத்தெரியாத வல்லாதிக்க சக்திகள், அறத்தினின்றும் தவறி, அறமே வாழ்வெனக் கொண்ட ஈழத்தமிழினத்தின் ஒற்றுமையைப் புலம்பெயர் தேசங்களிலும் சீர்குலைத்து தமக்கும் எமக்கும் பெருந்தீங்கைச் செய்ய விழைகின்றன. இவை எமக்குப் புதிதுமல்ல. இவற்றை எதிர்கொள்ள நாம் திராணியற்றவர்களும் அல்ல.

எம்மையும் எம் தாயக உறவுகளையும் பாதுகாக்கின்ற பொறுப்பும் தகைமையும் எம்மிடமே உள்ளன. விரைந்து செயலாற்றுவோம். எம் இனத்தினதும் தாயகத்தினதும் இருப்பை உறுதிசெய்வோம்.

நன்றி,
வணக்கம்.